# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | MC No.10/2024 | Date: 05.03.2026 |
| Deposition of Witness for | : | ம.சா.1 | |
| Name | : | மரகதம் | |

(எதிர்மனுதாரர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) எதிர்மனுதாரர், எனக்கு மாதம் ரூ.3000/-ம் ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று கடந்த 08-02-2020 ம் தேதி இதே நீதிமன்றம் உத்திரவு பிறப்பித்தது என்றால் சரிதான். மேற்படி, ஜீவனாம்சம் தொகை போதாது என்று மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து கடந்த 21-12-2022 ம் தேதி மேற்படி மெட்ராஸ் உயர்நீதிமன்றம் ரூ.5000/-ம் தொகையை உயர்த்தி உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். ரூ.5000/-ம் தொகையை உயர்நீதிமன்றம் உயர்த்தி வழங்கி 05 வருடங்கள் கூட ஆகாததால் மேற்படி தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கூறி இந்த மனு தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

2) எனது ஒரே மகள் பூர்ணிமா, எம்.டெக் படித்துள்ளார் என்றால் சரிதான். எனது மகள் சாப்ட்வேர் கம்பெனியில் வேலையில் உள்ளார் என்றால் ஏதாவது ஒரு கம்பெனியில் வேலையில் உள்ளார். எனது மகள் சாப்ட்வேர் கம்பெனியில் வேலையில் உள்ளார் என்றும், எனது மகள் மாதம் ரூ.1,75,000/-ம் தொகை சம்பளமாக பெற்று வருகிறார் என்றால் சரியல்ல. எனது மகள் மாதம் ரூ.1,75,000/-ம் தொகை

சம்பளமாக பெறவில்லை என்று நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை விட 6-7 வருடங்கள் மூத்தவர் என்றால் சரிதான்.

3) எதிர்மனுதாரர் சீனியர் சிட்டிசன் என்பதால் என்னை பராமரிக்க இயலாது என்றும், எனது மகள் தான் என்னை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது ஜீவனாம்ச தொகை போதாமல் இருந்தால் அதனை எனது மகளிடம் கோர வேண்டும் என்றால் சரியல்ல, எனக்கு விவாகரத்து ஆகாததால் என்னை பராமரிக்கும் கடமை எனது கணவருக்கு தான் உள்ளது. எனது மகள் எந்த வருடம் பிறந்தார் என்றால் 1987 ம் வருடம் பிறந்தார். எனது மகள் பிறந்து 02 வருடத்தில் இருந்தே நான் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4) நான், எதிர்மனுதாரரை 1990 ம் வருடத்தில் இருந்தே பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றும், நான் 2007 ம் வருடத்தில் இருந்து தான் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் மாண்புமிகு முதலாது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் OS NO.182/2014 என்ற வழக்கினை எதிர்மனுதாரரிடம் சீர்வரிசை செலவு கேட்டும், பாகம் கேட்டும் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி, வழக்கு கடந்த 04-11-2019 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான், ஆனால் தற்போது அந்த வழக்கின்மீது மேல்முறையீடு மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. மேற்படி, வழக்கை நான் தான் எனது மகளை தூண்டுதலின்பேரில் தான் தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) நான் சங்ககிரி அஞ்சல் அலுவலகத்தில் டெபாசிட் ரூ.15,00,000/-ம் தொகை டெபாசிட் செய்திருந்ததாகவும், அதனை எதிர்மனுதாரர் அதற்குண்டான

ஆவணத்தை அஞ்சல் அலுவலகத்தில் கேட்டபோது நான் ஆட்சேபணை தெரிவித்தேன் என்றால் சரியல்ல, எனக்கு எங்கும் கணக்கு இல்லை. எதிர்மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அஞ்சல் அலுவலகத்திற்கு டெபாசிட் சம்பந்தமான விளக்கம் கேட்டபோது, நான் அதற்கு எழுத்துமூலமான ஆட்சேபணை தெரிவித்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. எனக்கு சங்ககிரி அஞ்சல் அலுவலகத்தில் ரூ.15,00,000/-ம் தொகை டெபாசிட் செய்திருப்பதால் தான், எதிர்மனுதாரர் கேட்டபோது நான் ஆட்சேபணை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும், எனக்கு சங்ககிரி அர்பன் கூட்டுறவு வங்கியில் ரூ.15,00,000/-ம் தொகை டெபாசிட் உள்ளது என்றால் சரியல்ல.

6) கடந்த 24-03-2014 ம் தேதிமுதல் 28-11-2014 ம் தேதிக்குள் சங்ககிரி அர்பன் கூட்டுறவு வங்கியில் இருந்த ரூ.15,00,000/-ம் தொகையை வேறு வங்கிக்கு மாற்றி கடந்த 14-01-2015 ம் தேதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு 4.5 ஏக்கர் நிலம் தேவண்ணகவுண்டனூர் உள்ளது என்றால் சரிதான், ஆனால் அதனை எனது தகப்பனாருக்கு எழுதி வைத்து, எனது தகப்பனார் அவரது மகனுக்கு எழுதி வைத்துவிட்டார். நான் சொல்வது பொய் என்றும், எனக்கு எனது தாத்தாவின் நிலத்தில் பாகம் உள்ளது என்றும், அதனை மறைத்து ஜீவனாம்சம் பெறுவதற்காக எழுதி வைத்துவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) என்னுடன் பிறந்தவர் எனது தம்பி ஒருவர் தான் என்றால் சரிதான். எனது தாத்தா தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். நான் வசிக்கும் பெரியாங்காட்டில் பால் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் தொழில் செய்து

வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சொல்கிறேன் என்றும், நான் வசிக்கும் பெரியாங்காட்டில் பால் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன் என்றும், அதில் மாதம் ரூ.15,000/-ம் எனக்கு வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. எனக்கு ஈரோடு, மாணிக்கம்பாளையம், ஹவுசிங் யூனிட்டில் எனக்கு வீடு உள்ளது என்றும், அதனை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.7,500/-ம் எனக்கு வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. மேலும், ஈரோடு முனிசிபல் காலனியில் மூன்று கடைகளும், கடைகளுக்கு மேல் இரண்டு வீடுகளும் கட்டி அதன் மூலம் எனக்கு மாதம் ரூ.27,000/-ம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல.

8) நான் பி.ஏ., படித்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஸ்ரீதேவி பஸ் சர்வீஸ், ஸ்ரீதேவி ரிக் சர்வீஸ், ஸ்ரீதேவி பைனான்ஸ் ஆகியவற்றின் நான் ஒரு பங்குதாரராக உள்ளேன் என்றும், அதன்மூலமும் எனக்கு வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. ஸ்ரீதேவி பஸ் சர்வீஸ், ஸ்ரீதேவி ரிக் சர்வீஸ், ஸ்ரீதேவி பைனான்ஸ் ஆகியவற்றில் நான் கணக்காளராக இருந்து, அதில் சம்பளமும் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தந்தை சங்ககிரி இந்தியா சிமெண்ட் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான்.

9) எதிர்மனுதாரரின் தந்தை சங்ககிரி இந்தியா சிமெண்ட் நிறுவனத்தில் வேலை செய்து வந்த வருமானத்தின் மூலம்தான் 18-02-2002ம் வருடத்தில் ம.சா.ஆ.2ல் குறிப்பிட்டுள்ள சொத்தை கிரையம் பெற்றார் என்றும், அதில் எதிர்மனுதாரர் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல, நான் கொடுத்த சீதன பொருட்களையும், எனது கணவரின் வருமானத்தையும் வைத்து தான் கிரையம் பெற்றோம். நான் கொடுத்த சீதன பொருட்களையும், எனது கணவரின்

வருமானத்தையும் வைத்து தான் கிரையம் பெற்றோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

10) ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.6 வரையிலான பட்டாக்களில் உள்ள சொத்து எதிர்மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.6 வரையிலான பட்டாக்களில் உள்ள சொத்து சங்ககிரி - சேலம் புறவழிச்சாலைக்காக அரசால் 2007 ம் ஆண்டே கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, இன்னும் மீதம் 5 ஏக்கர் உள்ளது. இன்னும் மீதம் 5 ஏக்கர் உள்ளது என்று சொல்வதுபொய் என்றும், அதில் கொஞ்சம் நிலம் தான் உள்ளது என்றும், அதுவும் வானம் பார்த்த பூமி என்றும், அதன் மூலம் எந்த வருமானம் இல்லை என்றால் சரியல்ல.

11) எதிர்மனுதாரர் அறுவை சிகிச்சை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, வழக்கில் தாக்கல் செய்த எதிருரையின் மூலம் தான் தெரிந்து கொண்டேன். எதிர்மனுதாரருக்கு அறுவை சிகிச்சை செய்திருப்பதால் அவரால் முன்பு போல் வேலை செய்து வருமானம் ஈட்ட முடியவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு அறுவை சிகிச்சை செய்திருப்பதால் அவரால் முன்பு போல் வேலை செய்து வருமானம் ஈட்ட முடியவில்லை என்றும், முன்பு போல் அவரால் வழக்கறிஞராக தொழில் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

12) எதிர்மனுதாரருக்கு வாடகையின் மூலம் வருமானம் வருகிறது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அதன்மூலம் வருடம் ரூ.2,80,000/-ம் வருமானம் வருகிறது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வக்கீல் தொழில் மூலம் மாதம்

ரூ.50,000/-ம் வருமானம் வருகிறது என்று சொல்வது பொய் என்றால் ச ரியல்ல. எதிர்மனுதாரர் வீடு கட்டி வாடகை விட்டு மாதம் ரூ.7,500/- வருமானம் வருகிறது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

13) என்னை பராமரித்து கொள்வதற்கே எனக்கு போதுமான வருமானம் உள்ளதால், எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் ரூ.1,75,000/-ம் வருமானம் ஈட்டும் எனது மகளிடம் ஜீவனாம்சம் தொகை கேட்காமல், சீனியர் சிட்டிசனனாக எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்ச தொகை கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அறுவை சிகிச்சை செய்திருப்பதாலும், சீனியர் சிட்டிசன் என்பதாலும் அவரால் அவரையே பராமரிக்க அவருக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Marakatham